*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# பெண்களின் வலுவூட்டலில் உயர் கல்வியின் பங்களிப்பு: பால்நிலை நோக்கிலான மீளாய்வு

**எம்.எஸ். ஸுனூமி[1] & எம்.பீ.எப். இல்மா[2]**
[1&2]அரபு மொழித் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Correspondence: zunoomy@seu.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

பெண்களின் கல்வி ஒரு காத்திரமான அறிவுத் தளத்தில் சமுதாயம் வளர உதவுகிறது. ஒரு குடும்பம் நல்ல முன்மாதிரியாக அமைய அந்தக் குடும்பத்தைக் கொண்டு நடத்தும் பெண்ணின் அறிவு உதவி செய்கிறது. இன்றைய கால கட்டத்தில் பெண்களின் படிப்பு பல வித்திலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்தவகையில், பெண்களை வலுவூட்டுவதில் அவர்களின் உயர்கல்வியின் செல்வாக்கினை கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாக உள்ளது. இவ்வாய்வுக் கட்டுரையானது பண்புசார் முறையில் விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணிப்பீடுகள், ஆய்வுகள், நூல்கள், கட்டுரைகள், இணைய ஆக்கங்கள், இணையத் தளங்கள் மூலம் பெறப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. இவ்வாய்வானது இலங்கையிலுள்ள உயர் கல்வியை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையில் உயர்கல்வியை தொடர்வதில் பால்நிலை ரீதியாக பெண்களே அதிகளவில் காணப்படுகின்றனர். இதனால் பெண்களின் வலுவூட்டலுக்கு இவ்விடயம் பெரிதும் பக்கபலமாக அமைந்திருப்பதை காண முடியும். குறிப்பாக, சமூக செயற்பாடுகளில் ஆண்களின் ஈடுபாடு கணிசமாக காணப்படுகின்ற அதேவேளை கல்வி ரீதியான பெண்களின் இந்த முன்னேற்றமானது இலங்கையில் தொழில் துறைகளில் பெண்களின் ஈடுபாட்டிற்கு இட்டுச்சென்றுள்ளது. இதனால், பெண்கள் குறித்த சமூகப் பார்வை பால்நிலை ரீதியாக இலங்கையில் மாற்றமடைந்து வருகின்றது. அவ்வாறே, பட்டப்பின் படிப்புக்களை மேற்கொள்வதிலும் ஆண்களை விட பெண்கள் அதிக தொகையில் காணப்படுவது மேலும் மேலும் அவர்களின் வலுவூட்டலை மேம்படுத்துகின்றது ஆகியன இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாக காணப்படுகின்றன.

**பிரதான சொற்கள்:** பால்நிலை, உயர்கல்வி, பெண்களின் வலுவூட்டல், பட்டப்படிப்பு, பெண்

## 1. அறிமுகம்

மக்களின் கல்வியறிவு, உலகத்தில் நடக்கும் எந்த மாற்றத்திற்கும் அடித்தளமாகிறது. அது சமயத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது விஞ்ஞானத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், அவைகளின் வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் ஒரு சமுதாயம் மேற்கொள்ளும் கல்வி அமைப்பு இன்றியமையாததது. அதிலும் பெண்களின் கல்வி ஒரு காத்திரமான அறிவுத் தளத்தில் சமுதாயம் வளர உதவுகிறது. ஒரு குடும்பம் நல்ல முன்மாதிரியாக அமைய அந்தக் குடும்பத்தைக் கொண்டு நடத்தும் பெண்ணின் அறிவு உதவி செய்கிறது. இன்றைய கால கட்டத்தில் பெண்களின் படிப்பு பல வித்திலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. வீட்டில் அடைந்து கிடந்த பெண்கள் விண்வெளிப் பிரயாணம் செய்ய அவர்களின் கல்வி துணைசெய்கிறது. குடும்பத்தின் பொருளாதாரம் சிறப்பாக இருந்து நிம்மதியான வாழ்க்கை வாழ, பெண்கள் படிப்பதும் வேலைக்குப்போவதும் தவிர்க்கமுடியாத அம்சமாக இன்று கருதப்படுகிறது. பெண்களின் கல்வியால் இலங்கை பல விதத்திலும் மற்றைய தென்னாசிய நாடுகளை விட முன்னேறியிருக்கிறது. குழந்தைகள் ஆரோக்கியமாக வளரப் பெண்களின் படிப்பும் அதனால் அவர்கள் பெறும் பலவிதமான அறிவும் மிகவும் இன்றியமையாதது என்பதற்கு, இலங்கையில் பெண்களின் படிப்பு நிலை உயர, தாய்சேய் நலமும் உயர்ந்திருக்கிறது என்ற சுகாதார திணைக்கள அறிக்கைகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும் (வாத்தியார், 2015). இவ்வாறு, பெண்களின் வலுவூட்டலுக்கு அவர்கள் பெறுகின்ற கல்வி துணைபுரிவதாக அமைகின்றது.

பாடசாலைக் கல்விக்கு அப்பால் தரம்வாய்ந்த உயர்கல்வியை பெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் பெண்களின் சமூக பங்கேற்பை அதிகரிக்க முடியும். இதற்கு

பல்கலைக்கழக கல்வி மிகுந்த ஆற்றல் வாய்ந்ததொரு காரணியாக உள்ளது (குணதிலக, 2013). உயர் கல்வி பெறுவதானது தொழிலொன்றை பெறுவதற்கு மாத்திரம் முக்கியமானதன்று, மாறாக பெண்களின் வலுவூட்டலை செம்மைப்படுத்துவதற்கு அவசியமானதாக காணப்படுகின்றது.

ஒரு பெண் உயர் கல்வியில் ஈடுபடுகின்ற போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் இருந்து பாதுகாப்புப் பெற முடிகின்றது. ஏனெனில், ஒரு பெண்ணின் தன்னம்பிக்கையையும், சுய மதிப்பையும் கல்வி அதிகரிக்கின்றதுளூ அவளது சமூக தொடர்புகளை விரிவுபடுத்துகின்றது. சமூகத்திலுள்ள வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்குகின்றதுளூ அவள் வாழ்கின்ற சூழலை மாற்றியமைக்க வழியமைக்கின்றது (Jewkes, 2002). அத்தோடு ஒரு பெண் தனது வாழ்க்கைத் துணையை தெரிவுசெய்வதிலும் கல்வி சுதந்திரம் வழங்குகின்றது. இவ்வாறு பெண்களின் பால்நிலை வகிபாகங்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கு அவர்கள் கற்கின்ற கல்வி அவர்களுக்கு துணைசெய்கின்றன. இதனால் அவர்கள் தங்களின் வலுவூட்டலை விருத்தி செய்து கொள்ள முடிகின்றது. இந்தவகையில், பெண்களின் வலுவூட்டலுக்கு அவர்கள் பெறுகின்ற கல்வி பிரதான பங்களிப்பை வழங்குவதை அவதானிக்கலாம்.

## 2. ஆய்வுப் பிரச்சினை

சமூகம் எதிர்பார்க்கின்ற பால்நிலை வகிபாகங்கள் அனைத்தும் தவறானவை எனக் கூற முடியாது. மாறாக, ஒரு மனிதனின் உரிமைகளை, விருப்பங்களை செயற்படுத்த முடியாத போதே அவைகளை மாற்ற வேண்டிய தேவையும் உள்ளது. இந்தவகையிலேயே, பெண்களுக்கெதிரான அநீதிகள், பாலியல் துன்புறுத்தல்கள், தீர்மானம் எடுக்கும் அதிகாரங்கள், பொருளாதார செயற்படுகள் போன்ற சமூகம் சார் செயற்பாடுகளில் பெண்களை வலுப்படுத்த வேண்டிய தேவையை இலங்கைப் பெண்கள் எதிர்நோக்கி இருந்தனர். இவற்றுக்கெல்லாம் தீர்வாகவே பெண்களின் கல்வி ஈடுபாடு வலுப்பெற தொடங்கியது. இதனடியாக, பெண்களின் வலுவூட்டல்கள் பல கோணத்திலும் மேற்கொள்ளப்படுவதற்கான சிந்தனைகள் முன்வைக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இந்தவகையில், இலங்கையில் உயர்கல்வி பெண்களின் வலுவூட்டலை மேம்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துகின்றதா? எனும் ஆய்வு வினாவை இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக் கட்டுரையானது பண்புசார் முறையில் விபரிப்பு ஆய்வு முறையியலை (Descriptive Method) பயன்படுத்துகின்றது. உசாத்துணைப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணிப்பீடுகள், ஆய்வுகள், நூல்கள், கட்டுரைகள், இணைய ஆக்கங்கள், இணையத்தளங்கள் மூலம் பெறப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. இவ்வாய்வானது இலங்கையிலுள்ள உயர் கல்வியை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்படுகின்றது.

## 4. கலந்துரையாடல்

### *4.1 பால்நிலை பற்றிய அறிமுகம்*

பால் என்பது உயிரியல் ரீதியாக இயற்கையான பிறப்பின் மூலம் பெறப்படுவதாகும். இது ஆண், பெண் என உருவாக்கம் பெறுகின்றது. இவ் உயிரியல் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு அவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என சமூகத்தால் உருவாக்கப்பட்டதே பால்நிலையாகும் (கஜானா, பிறிஸ்கா மற்றும் கஜவிந்தன், 2018). இந்தவகையில், பால்நிலை என்பது சமூகத்தினால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, கற்பிக்கப்படுகின்றது எனலாம். இப்பால்நிலை இயல்புகள் சமூகத்திற்கு சமூகம், கலாசாரத்திற்கு கலாசாரம், நாட்டுக்கு நாடு வேறுபட்டு அமைகின்றன.

பால்நிலையானது சமூகத்தால் உருவாக்கப்பட்டதொரு எண்ணக்கருவாகும். சிறுவர்கள், சிறுமியர்கள், ஆண்கள், பெண்களிற்கு வழங்கப்பட்ட சமூக, கலாசார வரைவு பால்நிலை எனலாம். ஆண்களதும் பெண்களதும் கடமைகள், பொறுப்புக்கள், நடத்தைகள், வகிபங்குகள், உரிமைகள் என்பவற்றை வரையறுப்பவையாக இது மிளிர்கின்றது. ஆண், பெண்ணினது நியமங்கள், பெறுமானங்கள் என்பவற்றைக் குறிப்பையாகவும் பால்நிலை காணப்படுகின்றது

(கஜானா, பிறிஸ்கா மற்றும் கஜவிந்தன், *2018*). சமூகத்தினால் பால்நிலைக்கேற்ப வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளும், கட்டமைப்புக்களுமே பால்நிலை இயல்புகளாகும். இந்த வகிபாகங்கள் ஆண், பெண் பிறக்கும் போதே அவர்களுடன் சேர்ந்து வருவதில்லை. மாறாக, சமூகத்திலிருந்து சமூகமயமாக்கல் செயற்பாட்டின் மூலம் கற்றுக் கொள்ளப்படுகின்றன. குடும்பத்திலேயே முதன்முதலில் பால்நிலை வகிபாகங்கள் தோற்றம் பெறுகின்றன. மீளவலியுறுத்தல், வழங்கப்படும் சந்தர்ப்பங்கள், முன்மாதிரி, வார்த்தைப் பிரயோகம் போன்ற செயற்பாடுகள் குடும்பத்தில் இடம்பெறுவதால் ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் பால்நிலை பற்றிய புரிதலைப் பெற்றுக் கொள்கின்றனர். அடுத்து, கல்வி நிறுவனங்கள், வெகுஜன ஊடகங்கள், அரசியல் மற்றும் சமய நிறுவனங்கள் போன்றன (அய்யூப், *2018*) பால்நிலை வகிபாகங்களை மையப்படுத்தி செயற்படுவதால் அச்சூழலில் வளர்கின்ற சிறுவர்களும், சிறுமிகளும் இவைகள் தான் பால்நிலை செயற்பாடுகள் என உருவகித்துக் கொண்டு அதற்கேற்ப செயற்படுகின்றனர்.

### *4.2 பெண்களின் வலுவூட்டல்*

பால்நிலை சார்ந்த வேறுபாடுகள் உயிரியலை அடிப்படையாகக் கொண்டவையல்ல எனவும், ஆதலால் கல்வி, தொழில் வாய்ப்புகளில் ஆணும் பெண்ணும் சம உரிமையைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் தாராளவாத பெண்ணியம் உரிமைக் கோரிக்கை முன்வைக்கின்றது. ஆகவே, தாராளவாத பெண்ணியவாதிகளைப் பொறுத்தவரை, வலுவூட்டல் என்பது ஆண்களுக்கு நிகராக இருப்பதன் பொருட்டு, பெண்கள் மேலும் தனித்துவமான அதிகாரத்தைப் பெறுவதற்கான வழிவகைகளை ஆராய்வது பற்றியதாகும் என்பதுடன் சட்ட, அரசியல், மற்றும் அரசியல் யாப்பு மறுசீராக்கங்களே அத்தகைய வலுவூட்டலுக்கான வழிமுறையாகும் எனவும் கருதுகின்றது (Lorber, 1997).

Naila Kabeer *(1999)* என்பவர் அதிகாரமின்மை என்பதை தெரிவுகள் மறுக்கப்பட்ட ஒரு நிலையாகவும், வலுவூட்டல் என்பது தெரிவுகளை மேற்கொள்வதற்கான ஆற்றலை தனிநபர்களுக்கு வழங்குகின்ற ஒரு செயல்முறையாகவும் வரையறுத்துள்ளார். இவர் முதலாவது வரிசைத் தெரிவுகளுக்கும் (முக்கியமான வாழ்க்கைத் தெரிவுகள்) இரண்டாவது வரிசைத் தெரிவுகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டுள்ளார். மக்களின் வாழ்க்கையை வரையறுக்கின்ற அளவெல்லைகளை (எந்த வாழ்வாதாரத்தில் ஈடுபடுதல், திருமணம் செய்வதா அல்லது இல்லையா, குடும்பமாக வாழ்வதா அல்லது இல்லையா போன்றன) உள்ளடக்கியவையே முதலாவது வரிசைத் தெரிவுகளாகும். அதேவேளை, இரண்டாவது வரிசைத் தெரிவுகள் என்பவை ஒட்டுமொத்தமாகவன்றி, நாளாந்த வாழ்க்கைத் தரத்தில் தாக்கவிளைவை ஏற்படுத்தவல்ல தெரிவுகளாகும். வலுவூட்டல் பெறுவதற்கு, முதலில் முதலாவது வரிசைத் தெரிவுகள் தொடர்பில் அதிகளவான கட்டுப்பாட்டு அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. தெரிவுகளை மேற்கொள்வதற்கான ஆற்றலை மதிப்பிடுவதுடன் தொடர்புடைய மூன்று பரிமாணங்களை, அதாவது வளங்கள், அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான இயலாற்றல், சாதனைகள் என்பனவற்றை இனங்கண்டுள்ளார். இங்கே வளங்கள் என்பவை, தெரிவுகளை மேற்கொள்வதற்கான ஆற்றலுக்கு ஆதரவளிக்கின்ற பொருள், சமூக மற்றும் மனித வளங்களைக் குறிக்கின்றன. அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான இயலாற்றல் என்பது 'அகரீதியான அதிகாரமாகும்' அல்லது வாழ்க்கையில் ஒருவருக்கு என்ன தேவை என்பதைப் புரிந்துகொள்வதற்கும் அக்குறிக்கோளை அடைவதற்காகச் செயற்படுவதற்குமான ஆற்றல், மற்றும் வளங்களைச் சாதனைகளாக மாற்றுகின்ற செயல்முறை என்பனவற்றுடன் தொடர்புடையதாகும்.

வலுவூட்டல் இன்மையானது, ஒருவருக்கான தெரிவுகளை மேற்கொள்வதில் காணப்படுகின்ற ஆற்றலின்மையிலிருந்து தோற்றம்பெறுவதன் காரணமாக, அதிகாரமின்மையால் இடர்பாடுகளுக்கு உள்ளாகும் மக்களுக்கு வலுவூட்டல் இன்றியமையாததாக உள்ளது. வலுவூட்டலானது, நலிவுற்றோர் மற்றும் சமூக ரீதியாக ஒதுக்கப்பட்ட குழுக்கள் என்பன மத்தியில், பெண்களுக்கு ஏன் மிகவும் பொருத்தமடையதாக உள்ளது என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. இவற்றுள், வெளிப்படையான மனித உரிமை மீறலாகவுள்ள, தெரிவு அடிப்படையில் பெண் கருவுயிரை இல்லாதொழிக்கின்ற, பிறப்பிற்கு முன்னரே ஆரம்பிக்கின்ற, பெண்களுக்கு எதிரான பாரபட்ச நிலை மிகவும் முக்கியமானதாக உள்ளது.

பெண்களின் வலுவூட்டல் ஏன் முக்கியமானது என்பதற்கான சில காரணங்களை Malhotra and Schuler (2005) ஆகியோர் சுட்டிக் காட்டியுள்ளனர். முதலாவதாக, பெண்கள் வெறுமனே வறியோர், ஊனமுற்றோர், இனத்துவ அடிப்படையிலான சிறுபான்மையினர் போன்ற வலுவூட்டப்படாத தனிநபர்களை உள்ளடக்கிய பல குழுக்களில் ஒன்றாக இல்லை. மிக

நுட்பமாகக் கூறுவதானால், அவர்கள் அனைத்துக் குழுக்களையும் முழுநிறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாவர். இரண்டாவதாக, பெண்களின் வலுவூட்டல் இன்மையானது குடும்பம், மற்றும் குடும்பங்களுக்கு இடையிலான தொடர்பு என்பனவற்றிலிருந்து தோற்றம் பெறுகின்றது, ஆனால் வலுவூட்டலற்ற, அதிகாரமற்ற ஏனைய குழுக்களைப் பொறுத்தவரை அவ்வாறு நிகழ்வதில்லை. ஆகவே மூன்றாவதாக, வலுவூட்டலுக்கு ஒட்டுமொத்தமாக நிறுவன ரீதியான மாற்றம் தேவைப்படுகின்றபோதும், பெண்களின் வலுவூட்டலுக்கு, விஷேடமாக ஆணாதிக்க முறைக்கு ஆதரவு வழங்குகின்ற நிறுவனங்களில் முழுமையான தாக்கத்தை ஏற்படுத்தவல்ல ஒரு மாற்றம் தேவைப்படுகின்றது.

பெண்களின் வலுவூட்டலுக்கு கல்வி இன்றியமையாததாகவுள்ளது. தெரிவுச் சுதந்திரத்தைக் கொண்டிருப்பதற்கு பல வழிமுறைகளிலும் காரணமாக அமைவதன் மூலம், கல்வி பெண்களின் வலுவூட்டலை மாத்திரமன்றி, அவர்களின் ஒட்டுமொத்த வலுவூட்டலையும் ஊக்குவிக்கின்றது. கல்வி வாழ்க்கையைத் தேர்ச்சியுடையதாக மாற்றுவதனால், பெண்களின் வாழ்க்கைத்தரம் கல்வியுடன் சேர்ந்து அதிகரிக்கின்றது. உண்மையில், பெண்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படச்செய்கின்ற தீர்மானம் எடுத்தலில் அதிகளவான சுதந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் ஆற்றலில் செல்வாக்குச் செலுத்துவதில், ஆரம்பக் கல்விக்கு மேலான கல்வி அடைவுமட்டம் முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படுகின்றது.


ஆயினும், கல்வி முறைமைக்கு வெளியேயுள்ள சமூகக் கட்டமைப்பு தொடர்ந்தும் பாரபட்சமான பால்நிலைக் கருத்தியல் கோட்பாடுகளுக்கு ஆதரவளித்து வருமாயின், கல்வி உரிமையினால் மாத்திரம் பெண்களின் வலுவூட்டலைத் தோற்றுவிக்க முடியாது. ஆகவே, கல்வியை பெண்களுக்கான தற்சார்பு நிலைக்கான ஒரு கருவியாக மாத்திரமன்றி, சமூகத்தின் ஆணாதிக்கக் கட்டமைப்பிற்கு சவால்விடுவதற்கான ஒரு வழிமுறையாகவும் நோக்குவது முக்கியமானதாகும். இதனால், பெண்களின் வலுவூட்டலைப் பொறுத்தவரை கல்வி பயனுள்ள ஒன்றாக உள்ளது. இவ்வாறு கல்வித் துறையினூடாக மேற்கொள்ளப்படும் பெண்களின் வலுவூட்டலானது அவர்களின் பொருளாதார, சமூக, அரசியல் போன்ற வலுவூட்டல்களுக்கு துணையாக அமைகின்றது.

### *4.3 பெண்களின் வலுவூட்டலில் உயர் கல்வி*

கல்வியை ஆண், பெண் என்ற வேறுபாடின்றி இருபாலாரும் கற்க வேண்டும். இதில் பாகுபாடு காட்டுவது சமூக மாற்றத்தில் தாக்கம் செலுத்தக் கூடியதாக அமைந்து விடும். ஆண்கள் கல்வியில் காட்டும் ஆர்வத்தைப் போலவே பெண்களும் கல்வியில் ஆர்வத்துடன் செயற்பட வேண்டும். ஏனெனில், அறிவு என்பது ஆண்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. மாறாக, சமூக இருப்பை சிறப்பாக பேணிக் கொள்ள கட்டாயம் ஆண்களும், பெண்களும் அதிக கரிசனை கொடுத்து செயற்பட வேண்டும். இந்தவகையில், இலங்கையில் 1931ம் ஆண்டு ஆண், பெண் உட்பட அனைவருக்கும் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்ப காலங்களில் பெண்கள் பௌத்த துறவறம் மூலமாக ஆசிரமங்களில் கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார்கள். ஆனால் அது மட்டுப்படுத்தப்பட்ட கல்வி முறையாகவே காணப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க சமயக் கல்வி முறை மூலம் கற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு இலங்கைப் பெண்களுக்குக் கிடைத்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ சமய ஸ்தாபனங்கள் மூலமாகக் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது (ஹஸ்புல்லாஹ் மற்றும் சைபுத்தீன், 2000). 1833 ஆம் ஆண்டு கோல்புரூக் ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தபோது மூன்று விதமான பாடசாலை முறைகள் இங்கு உருவாகியிருந்தன. அரசாங்கப் பாடசாலை, புரட்டஸ்த்தாந்து மிஷன் பாடசாலை, தனியாரால் நடத்தப்பட்ட பாடசாலை முறை போன்ற பாடசாலைகள் காணப்பட்டன. இந்த கல்வி முறையில் கோல்புரூக் ஆணைக்குழுவினர் சில மாற்றங்களைக் கொண்டு வந்தனர். பாடசாலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பாடசாலை ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. ஆங்கிலக்கல்வி ஊக்கப்படுத்தப்பட்டது. இருந்தாலும் மிஷனரிகள் மதத்தைப் பரப்பும் நோக்கிலேயே தமது கல்வி கற்றல் முறையை மேற்கொண்டன (ஹம்தூன், 1998).

இதற்குப் பின்னரான காலப்பகுதியில் பெண் கல்வி மீதான சமூக விழிப்புணர்வு ஏற்பட்டதன் விளைவாக, பெண் கல்வியை கற்பதற்கான வாய்ப்புக்கள் படிப்படியாகவே சமூகமயக்கலுக்குள் உள்வாங்கப்பட்டது. இதன்காரணமாக, கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட பெண் மாணவிகள் உயர்கல்விக்காக பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கற்கத் தொடங்கினர். க.பொ.த. உயர் தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழக நுழைவிற்கு தயாராகும் பெண்களின் தொகையை விட ஆண்களின் தொகை குறைவாக காணப்படுவது அவதானத்திற்குரிய விடயமாகும். பெண்கள் சமூகத்தில் வலுவூட்டப்படுவதற்கு அவர்களின் உயர்கல்விப் பிரவேசம்

இன்றியமையாத அம்சமாக காணப்படுகின்றது. அஹ்மத் லெப்பை (2011) இன் ஆய்வின் படி, 2010 களிலேயே பல்கலைக்கழக நுழைவில் ஆண், பெண் சமமின்மை ஏற்பட்டுள்ளதாக கலந்துரையாடுகின்றார். அதாவது, பல்கலைக்கழக நுழைவுக்கான தெரிவில் ஆண்களை விட பெண்களின் தொகை அதிகரித்துக் காணப்படுவதாக கண்டறிந்துள்ளார். அதேநேரம், வணிக, விஞ்ஞான துறைகளுக்கான நுழைவுகளில் ஆண்களின் வீதம் அதிகமாக காணப்படும் அதேநேரம் கலைத்துறையிலேயே பெண்களின் நுழைவு மிக அதிகளவில் காணப்படுவதாகவும் கண்டறிந்துள்ளார். இந்நிலைமை இலங்கையில் பால்நிலை வகிபாகங்களை தெரியப்படுத்துவதாக அமைகின்றது. இலங்கைச் சூழலில் கற்கின்ற பெண் மாணவிகள் தங்களது உயர்தரத்திற்கான பாடத்தெரிவின் போதும், பல்கலைக்கழக நுழைவிற்கு விண்ணப்பிக்கும் போது அங்கு சமூகத்தால் எழுதப்படாத விதிகளாக காணப்படுகின்ற பால்நிலை வகிபாகங்கள் பிரதான தாக்கத்தை செலுத்துகின்றன என அய்யூப் (2018) தனது ஆய்வில் கண்டறிந்துள்ளார். இதனால், கலைத்துறை சார்ந்த துறைகளில் பெண்களின் வலுவூட்டல் ஏனைய துறைகளை விட அதிகமாக காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. உயர்தரப் பாடத்தெரிவிலும், பல்கலைக்கழக விண்ணப்பித்தலிலும் பால்நிலை வகிபாகங்கள் இலங்கையில் பாரியளவு தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (2019) வெளியிடப்பட்ட பல்கலைக்கழக விண்ணப்பம் தொடர்பான தரவுகளை படம் 1 விபரிக்கின்றது.





படம் 1 : பல்கலைக்கழக விண்ணப்பங்கள் (மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

அஹ்மத் லெப்பை (2011) ஆய்வின் படி 1940 தொடக்கம் 2000 வரையான காலப்பகுதிகளில் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்து தெரிவாகின்றவர்களில் ஆண் மாணவர்களே அதிகமாக காணப்பட்டனர். 2000 இற்கு பின்னரான காலப்பகுதியில் ஆண்களை விட பெண்களே உயர்கல்விக்கு அதிகமாக உள்வாங்கப்பட்டனர். அதாவது, 1940களில் இருந்து ஆண்களின் உயர்கல்வி வீதம் படிப்படியாக குறைவடைந்து வந்த அதேநேரம் பெண்களின் உயர்கல்வி வீதம் அதிகரித்து வந்தது. இதனால் இலங்கை சமூகத்தில் பெண்களின் வலுவூட்டலுக்கு உயர்கல்வி பக்கபலமாக அமைந்திருந்ததை காண முடிகின்றது.

இந்தவகையில், கடந்த இறுதி மூன்று கல்வியாண்டுகளின் தரவுகளை அவதானிக்கும் போது, பெண்களின் உயர்கல்வி மீதான ஈடுபாடு 62.3%, 62.9%, 64% என அதிகரித்து செல்கின்ற அதேநேரம், 37.7%, 37.1%, 36% என ஆண்களின் உயர்கல்வி விண்ணப்பங்கள் குறைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. பெண்களின் சமூக, பொருளாதார, அரசியல் வலுவூட்டலுக்கு அவர்களது உயர்கல்வி பெரிதும் பக்கபலமாக அமையும் என்பது யதார்த்தமான விடயமாகும். இந்தவகையில், பால்நிலை ரீதியாக நோக்குகின்ற போது ஆண்களை விட பெண்களே உயர்கல்வி மீதான நாட்டத்தில் ஈடுபாடு கொண்டு முன்னேறுவதை அவதானிக்கலாம்.

அதேநேரம், இலங்கைச் சமூகமயமாக்கலின் எதிர்பார்ப்புகள் அவர்களின் கற்கைத் தெரிவுகளில் தாக்கம் செலுத்துவதாகவே அமைகின்றது. அய்யூப் (2018) குறிப்பிடுவது போன்று, பல்கலைக்கழக கற்கைகளை தெரிவுசெய்வதிலும் பெண்களின் பால்நிலை வகிபாகங்கள் தாக்கம் செலுத்துவதாகவே அமைகின்றது. ஒரு பெண் தான் வாழ்கின்ற சூழலில் பின்பற்றப்படும் பால்நிலை தொடர்பான எதிர்பார்ப்புக்கள் அவளது உயர்கல்வியில் தாக்கம் செலுத்துவதாக அமைகின்றது. 2000 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் பெண்கள் கலைத்துறைசார் கற்கைத்துறைத் தெரிவுகளில் அதிக நாட்டம் கொண்டிருந்தனர் (அஹ்மத் லெப்பை, 2011). எனினும் அண்மையக் கால பல்கலைக்கழகத் தெரிவில் பெண்களின் வீதம் அரைவாசியை விட அதிகமாகியதால் அவர்களும் தங்களின் வலுவூட்டலுக்காக பல்துறைசார் கற்கைத்துறைகளை தெரிவுசெய்யும் வழமையை பின்பற்றத் தலைப்பட்டனர். பல்கலைக்கழக நுழைவில் கற்கைநெறி




தெரிவில் பால்நிலைசார் தரவுகளை படம் 2 காட்டுகின்றது.

படம் 2: பல்கலைக்கழக நுழைவு (மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

இறுதி கல்வியாண்டில் உயர்கல்வியில் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி தொடர்பில் பால்நிலை வகிபாகங்கள் கணிசமானளவு தாக்கம் செலுத்தியிருப்பதை அவதானிக்கலாம். பெண்களில் பல்கலைக்கழக நுழைவு வருடந்தோறும் அதிகரித்து செல்வதனாலும் இலங்கைச் சூழலில் பெண் கல்விக்கான, பெண் தலைமைத்துவ வகிபாகங்களுக்கான தேவை உணரப்பட்டதாலும் அவர்களின் கற்கைத் தெரிவு ஆண்களின் தொகையுடன் ஒப்பிடும் அளவில் காணப்படுகின்றன. ஆனபோதிலும், பெண்களின் கலைத் துறை தெரிவு கணிசமானளவு அதிகரித்து இருப்பதை அவதானிக்கலாம். ஆண்களை விட பெண்களின் தெரிவு இரு மடங்கை விட அதிகமாக காணப்படுகின்றது. இவ்வாறு கலைத்துறையை தெரிவுசெய்வதில் பெண்களின் சமயம், கலாசார விழுமியங்கள் பாரியளவு தாக்கம் செலுத்துகின்றன.

அதேநேரம், கலைத்துறைப் பட்டத்தை பூர்த்தி செய்து கற்பித்தல் தொழில், அலுவலக உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்ற பதவிகளை பெற்றுக் கொள்வதன் மூலம் நடுத்தர வாழ்க்கையை கொண்டுசெல்ல முடியும் என்ற மனோநிலையும் இக்கலைத் துறைத் தெரிவிற்கான முக்கிய அம்சங்களாக உள்ளன. முகாமைத்துவம், வணிகம், விஞ்ஞானம் போன்ற தெரிவுகளில் அண்மைக்காலம் வரை ஆண்களே அதிகளவில் இருந்தாலும், பல்கலைக்கழக பிரவேசத்தில் பெண்களின் தொகை அதிகரித்தன் விளைவாக இக்கற்கைத் தெரிவுகளிலும் பெண்களின் தொகை அண்மைய வருடங்களில் அதிகரித்து இருப்பது சமூக மட்டத்தில் பெண்களின் வலுவூட்டலை பிரதிபலிப்பதாகவே அமைகின்றது.

பொறியியல், விவசாயம், கணினிக் கற்கை, தொழிநுட்ப கற்கை ஆகியன பொதுவாக கள வேலைகளுடன் அதிக சிரத்தையுடன் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதனால் பெண்கள் இத்துறைகளை தெரிவு செய்து உயர்கல்வியைத் தொடர்வதில் பிரயத்தனம் மேற்கொள்வதில்லை. ஏனெனில், இலங்கைச் சூழலில் பெண்கள் கள வேலைகளில், கடின வேலைகளில் ஈடுபடுவது அவர்களின் வகிபாகமாக சமூகம் கற்றுக் கொடுக்கவில்லை. எனினும் வளர்ந்து வரும் தொழிநுட்ப செயற்பாடுகள் எதிர்காலத்தில் பெண்கள் இத்துறையில் ஈடுபடுவார்கள் என்பதை மறைமுகமாக தெரியப்படுத்துகின்றன. அதேபோன்று, பெண்களுக்கே உரித்தான கற்கைகளாக சமூகம் அடையாளப்படுத்தி இருக்கும் சுற்றாடல், ஆரோக்கிய விஞ்ஞானம், ஆயர்வேத மருந்து போன்ற கற்கைகளில் ஆண்களை விட பெண்களே பல மடங்கு அதிகளவில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறு, உயர்கல்வித் துறையில் பெண்களின் பிரவேசம் அதிகரித்தமையால் சமூகத்தில் நிர்வாக, தலைமைத்துவ, பொருளாதார அதிகாரங்கள் பெண்களின் வலுவூட்டலுக்கான பக்கபலமாக மாறுகின்றன. அதேநேரம், ஆண்கள் பாடசாலைக் கல்வி விடயத்தில் கவனயீனமாக செயற்படுவதால் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை வெகுவாக இழக்கின்றனர். இதனால் பணம் சம்பாதிப்பது மாத்திரம் வாழ்க்கைக்கு போதுமானது என்ற எண்ணத்தில் உழைப்பதற்கான வழிகளை மாத்திரம் தேடுகின்ற நிலை உருவாகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால், கல்வி கற்ற பெண்கள் தலைமைத்துவ, நிர்வாக செயற்பாடுகளுக்கு அவர்களின் திறன்களின் மூலம் உள்வாங்கப்படுகின்றனர். இந்த விடயம், பால்நிலை வகிபாகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி வருவதை அண்மைய ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

### *4.4 பட்டப்பின் படிப்பில் பால்நிலை நோக்கு*


பட்டப்படிப்பில் பால்நிலை ரீதியாக பெண்களின் ஈடுபாடு கணிசமானளவு காணப்படுவதை போன்றே பட்டப்பின் படிப்பிலும் பெண்களின் ஈடுபாடு அதிகரித்துள்ளது. இதனால் இலங்கை சமூகத்தில் பெண்களின் வலுவூட்டலுக்கு கல்வித் துறையின் பங்களிப்பு மேலும் வியாபிப்பதாக அமையப்பெறுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில், அண்ணளவாக வீட்டுக்கு இரு பட்டதாரிகள் இருக்கின்றனர். அவர்கள் நடுத்தர வாழ்க்கையைப் பேண அரச தொழில் ஒன்றில் ஈடுபடுகின்றனர். இதனையும் தாண்டி, பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் போது அச்சமூகத்தில் அவர்களுக்கான மதிப்பு அதிகரிக்கும். ஏனெனில், ஒருவரின் கல்வி அடைவுகளை கொண்டும் அவருக்கான மதிப்பு இலங்கைச் சமூகத்தால் வழங்கப்படுகின்றது. இதனடியாக, பட்டப்பின் படிப்பை தொடரும் பெண்களுக்கு அவர்களுக்கான வலுவூட்டல்கள் திருப்தியான வகையில் கிடைக்கப்பெறுவதை அவதானிக்க முடியும். இந்தவகையில் 2019ம் ஆண்டில் பட்டப்பின் படிப்பை தொடர்ந்தவர்கள் தொடர்பான தரவுகளை பால்நிலை ரீதியாக நோக்குவதற்கு படம் 3 மற்றும் 4 துணைபுரிகின்றன.

**Total Postgraduate Output - 2019**

| Faculty/Academic Programme | Female | Total |
|---|---|---|
| Arts | 1,224 | 2,076 |
| Education | 2,243 | 3,165 |
| Management & Commerce | 745 | 1,715 |
| Law | 103 | 177 |
| Medicine, Dental & Allied Health Sc. | 434 | 873 |
| Vet. Science | 12 | 28 |
| Agriculture | 155 | 248 |
| Engineering | 99 | 415 |
| Architecture | 34 | 64 |
| Science/IT | 581 | 1,199 |
| Indigenous Medicine | 10 | 31 |
| Total | 5,640 | 9,991 |


படம் 3: பட்டப்பின் படிப்பு

*(மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)*




படம் 4: பட்டப்பின் படிப்பு (வீதத்தில்) (மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

2019ம் ஆண்டில் பட்டப்பின் படிப்பை நிறைவுசெய்தவர்களில் 56.5 வீதமானவர்கள் பெண்களாகவும், 43.5 வீதமானவர்கள் ஆண்களாகவும் காணப்படுகின்றனர். உயர்கல்வியில் பட்டப்பின் படிப்பை தொடர்வதானது மிகுந்த சவாலுக்குரிய விடயமாக காணப்படுகின்றது. இலங்கை சராசரி வாழ்க்கை இயல்பை எடுத்து நோக்குகின்ற போது, பட்டப்பின் படிப்பிற்கான காலங்கள் பெரும்பாலும் திருமணமான நிலையிலும், அரச அல்லது தனியார் துறையில் தொழில் ஒன்றையும் மேற்கொண்ட நிலையிலேயே காணப்படுகின்றன. இதன்போது, பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையை பட்டப்பின் படிப்பை மேற்கொள்வோர் எதிர்நோக்குவர். இந்தவகையில் நோக்கும் போது, பால்நிலை ரீதியாக பெண்கள் இதனை ஆண்களை விட அதிகளவு தொகையில் தொடர்வதானது பெண்களின் சமூக வலுவூட்டல்கள் பரவலாக்கப்படுவதாகவே அமைகின்றன. இவ்வாறு பல சவால்களோடு பட்டப்பின் படிப்பை பெண்கள் நிறைவுசெய்கின்ற போது, அவர்களது உயர்கல்வி அவர்களுக்கான வலுவூட்டல்களை வழங்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அவ்வாறே, இலங்கைச் சமூகமும் அதற்கான வகிபாகங்களை உருவாக்கிக் கொடுக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில், பால்நிலை ரீதியாக பெண்களின் வலுவூட்டலுக்கு கல்வி ரீதியான அடைவுகள் மிகச்சிறந்த பங்களிப்பினை வழங்குகின்றன. இந்தவகையில், உயர்கல்வித் துறையில் பணியாற்றும் விரிவுரையாளர்களை பால்நிலை ரீதியாக நோக்குவதற்கு படம் 5 உதவிபுரிகின்றது.




படம் 5: பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் (மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாக பணிபுரிகின்றவர்களுக்கு அவர்களது சமூகத்தில் கண்ணியம் வழங்கப்படுகின்ற இயல்பு காணப்படுகின்றது. இவர்களை தங்களது சமூக, கலாசார

விடயங்களுக்கு தலைமைகளாக, அவற்றை நிர்வகிப்பவர்களாக நியமிக்கின்ற சமூக வகிபாகம் காணப்படுகின்றது. இந்நிலையில், ஆண்கள் உயர்கல்வி விடயத்திலும், உயர்கல்வி தொழிற்துறைகளிலும் காட்டும் ஈடுபாட்டை விட பெண்கள் அதிகமாக ஈடுபடுவதால் அவர்களின் வலுவூட்டல் உயர்கல்வி ரீதியாக மேம்படுகின்றது. இந்தவகையில், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக 59.3% ஆன பெண்களும் 40.7% ஆன ஆண்களும் காணப்படுகின்றனர். சிரேஷ்ட விரிவுரையாளர்களில் பெண்கள் 45.4% வீதமானவர்களும், 54.6% வீதமான ஆண்களும் காணப்படுகின்றனர். 33.1% பெண் பேராசிரியர்களும், 66.9% ஆண் பேராசிரியர்களும் காணப்படு கின்றனர். இத்தரவுகளை நோக்கும் போது, 2000ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் ஆண்களின் உயர்கல்வி ஈடுபாடு அதிகளவில் காணப்பட்டதால் அவர்களின் அதிகமானோர் தொடர் பட்டப்பின் படிப்புக்களினால் சிரேஷ்ட விரிவுரையாளர்களாகவும், பேராசிரியர்களாகவும் பணிபுரிகின்றனர். அதேவேளை, 2000ம் ஆண்டுகளுக்கு பிற்பட்ட காலத்தில் பெண்களின் உயர்கல்வி நுழைவு அதிகரித்ததன் விளைவாக, பெண்கள் விரிவுரையாளர்களாக ஆண்களை விட அதிகளவிலும், அரைவாசியை விட சற்றுக் குறைவான வீதத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்களாகவும் பணியாற்றுகின்றனர். உண்மையில், பெண்களின் அண்மைய தசாப்த உயர்கல்வி நாட்டங்கள் அவர்களை விரிவுரையாளர்களாக, சிரேஷ்ட விரிவுரையாளர்களாக, பேராசிரியர்களாக மாற்றியிருக்கின்றன. இதனால் அவர்களுக்கும் ஏனைய பெண்களுக்குமான அதிகார, பொருளாதார, சமூக வலுவூட்டல்கள் கணிசமானளவு அதிகரிப்பதையே அவதானிக்க முடியும்.

### *4.5 பெண்களின் வலுவூட்டலில் உயர்கல்வியின் பங்களிப்பு*

பெண்களின் கல்வி அடைவுகள் அவர்களில் வலுவூட்டலுக்கு அவசியமானதாக காணப்படுகின்றன. குறிப்பாக உயர்கல்வியில் பெண்களின் ஈடுபாடு அவர்களின் பொருளாதார, நிர்வாக, தலைமைத்துவ வலுவூட்டல்களுக்கு பிரதானமானவைகளாக அடையாளப்படுத்தப் படுகின்றன. இலங்கை நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து செல்வதனால் நடுத்தர வாழ்க்கை நடத்திச் செல்வதற்கு போதியளவான பொருளாதாரம் அவசியப்படுகின்றது. இதன்போது, ஆண் (கணவன்) மாத்திரம் ஆசிரியராக, அலுவலக உத்தியோகத்தராக அரச தொழில் செய்யும் போது பொருளாதார ரீதியான சவால்களை முகங்கொடுக்க வேண்டும். அதேநேரம் பெண் (மனைவி) அரச தொழிலொன்றை செய்யும் போது பொருளாதார விடயங்களை பேணிக்கொள்ள முடியும். இந்தவகையில், உயர்கல்வியை முடித்த பெண்கள் அரச தொழில்வாய்ப்பினை பெறுகின்ற போது அது அவர்களின் பொருளாதார ரீதியான வலுவூட்டலுக்கு துணைபுரியும். சில தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் பெண்கள் ஆண்களின் பொருளாதாரத்திலேயே தங்கியிருக்க வேண்டிய பால்நிலை வகிபாகத்தை சமூகங்கள் எதிர்பார்த்து இருந்தன. எனினும் இன்றைய வருடங்களில் பெண்களின் உயர்கல்விப் பிரவேசம் அவர்களின் பொருளாதார ரீதியான வலுவூட்டலைப் பெறுவதற்கான உபாயமாக காணப்படுகின்றது. இதனால் இன்றைய சமூக எதிர்பார்ப்புக்கள் பெண்களை வேலைக்கு செல்ல அனுமதிக்கின்றன. இதனால் பொருளாதார ரீதியான வலுவூட்டலை பெண்களை பெறுகின்றனர். ஒவ்வொரு வருடமும் பட்டப்படிப்பை முடித்து வெளியேறுபவர்களில் பெண்களின் தொகையை அதிகளவில் காணப்படுகின்றன. இதனை 2019ம் ஆண்டு தரவு படம் 6 இல் விபரிக்கின்றது.

**Total Graduate (Bachelor Degree) Output - 2019**

| Faculty/Academic Programme | Female | Total |
|---|---|---|
| Arts | 7,603 | 9,380 |
| Education | 171 | 185 |
| Management & Commerce | 3,620 | 5,445 |
| Law | 472 | 767 |
| Medicine | 747 | 1,188 |
| Dental Science | 45 | 87 |
| Vet. Science | 40 | 54 |
| Agriculture | 627 | 920 |
| Engineering | 326 | 1,026 |
| Architecture | 97 | 242 |
| Computer Science | 575 | 1,210 |
| Allied Health Sciences | 595 | 745 |
| Science | 2,081 | 3,393 |
| Indigenous Medicine | 193 | 248 |
| **Total** | **17,192** | **24,890** |

படம் 6: பட்டம் பெற்று வெளியேறியவர்கள்
(மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

இத்தரவுகளின் படி, 2019ம் ஆண்டு பட்டம் பெற்ற 24,890 பேரில் 17,192 பேர் பெண்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் பட்டம் பெற்ற பின்னர் பெண்கள் பணிபுரிய வேண்டுமென சமூகம் எதிர்பார்க்கின்ற அரச தொழில்களை இவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். குறிப்பாக, ஆசிரியராக, அலுவலக உத்தியோகத்தராக, அபிவிருத்தி உத்தியோகத்தராக என இலகுவான தொழில்களை பெற்றுக் கொள்ளும் இவர்கள் பொருளாதார ரீதியாக வலுப்பெறுகின்றனர். இதன்காரணமாக இவர்களின் பொருளாதார வலுவூட்டல் காரணமாக குடும்ப, சமூக நிறுவனங்களில் தீர்மானம் எடுக்கும் தளத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

கடந்த வருடம் 2020ல் 50,177 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டன. அதில் 38,760 பெண் பட்டதாரிகள் காணப்பட்டனர். குறிப்பாக, கலைத்துறை பட்டதாரிகளாக 31,172 பேர் நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர். வணிகத்துறையில் 1839 பட்டதாரிகளும், முகாமைத்துவ துறையில் 7278 பட்டதாரிகளும், விஞ்ஞான துறையில் 4494 பட்டதாரிகளும் நியமனங்களைப் பெற்றனர் (ஜனாதிபதி அலுவலகம், 2020). இந்தவகையில் பெண்களின் உயர்கல்விக்கான பிரவேசம் ஆண்களை விட அதிகமாக காணப்படுகின்றது போலவே அரச தொழில் துறையில் உள்வாங்கப்படுபவர்களில் மிக அதிகமானோர் பெண்களாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இன்றைய இலங்கைச் சூழலில் ஆணும், பெண்ணும் தொழிலுக்கு செல்வதன் மூலமே பொருளாதார விடயங்களை ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும் என்ற மனோநிலை உருவாக்கத்தால் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் அவர்களது உயர்கல்வி மூலம் பெறுகின்ற பட்டத்தால் நிறைவேற்றப்படுகின்றது. அதேபோன்று, பால்நிலை தொடர்பான சமூக எதிர்பார்ப்புகளும் வெகுவாக மாறிக்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது, பெண்களுக்கு கல்வியறிவு அவசியமில்லை, பாடசாலைக் கல்வி மாத்திரமே போதுமானது, பாடசாலைக் கல்வி முடிந்ததும் திருமணம் முடிப்பது போதுமானது போன்ற பால்நிலை எதிர்பார்ப்புக்கள் படிப்படியாக மழுங்கடிக்கப்பட்டு இன்று பால்நிலை வகிபாகங்கள் தொடர்பான புதிய பரிமாணங்கள் இலங்கையில் தளிர்விடுவதை சமூக செயற்பாடுகள் மூலம் அவதானிக்க முடியும்.

இவ்வாறு பால்நிலை வகிபாகங்கள் சமூகத்தில் மாற்றமடைவதற்கு கல்வித் துறையின் பங்களிப்பு பிரதானமாக அமைகின்றது. அவர்களின் வலுவூட்டலுக்கு இக்கல்வித் துறைசார் செயற்பாடுகள் அவர்களது சமூக எதிர்பார்ப்புகளை தர்க்க ரீதியாக, ஆய்வு ரீதியாக முன்வைக்கின்றன. இதனால் சமூகத்தால் அவற்றை புறக்கணிக்க முடியாதுள்ளது. பால்நிலை ரீதியான சமூகம் தனக்கு தானே விதித்துக்கொண்ட கட்டுப்பாடுகளில் இருந்து பெண்களின் வலுவூட்டல்கள் மேலும் மேலும் அதிகரிக்க வேண்டுமாயின், அங்கு உயர்கல்வி ரீதியான பெண்களின் ஈடுபாடு அதிகரிக்க வேண்டும். பெண்கள் உயர்கல்வியில் ஈடுபடும் காலமெல்லாம் அவர்களின் வலுவூட்டல்கள் வலுப்பெற்றுக் கொண்டே செல்லும் என்பதை கால மாற்றங்கள் நிரூபிக்கின்றன.

### 4.6 பெண்களின் வலுவூட்டலில் உயர்கல்விக்கான வாய்ப்புக்கள்

இலங்கையில் உயர்கல்வியை கட்டணமின்றி தொடர்வதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அத்தோடு, மாதாந்தம் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மானியத் தொகையும் வழங்கப்படுகின்றது. இவ்வாறு இலவசக் கல்வி பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறு காணப்படுவதே உயர்கல்வியை தொடர்வதற்கான சிறந்த வாய்ப்பாக பெண்களுக்கு காணப்படுகின்றது. அத்துடன், குறுகிய பரப்பைக் கொண்ட இலங்கைத் தீவில் 15 பல்கலைக்கழகங்களும், அதிகளவான அரச, தனியார் கல்வி நிறுவனங்கள் காணப்படுவது பெண்களின் உயர்கல்விக்கான மிகச்சிறந்த வாய்ப்புக்களாக உள்ளன. அத்தோடு பட்டப்பின் படிப்பை தொடர்வதற்கான பட்டப்பின் படிப்பு நிலையங்களும் அதிகளவான பல்கலைக்கழகங்களிலேயே காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில், உயர்கல்வி ரீதியாக பெண்கள் தங்களின் வலுவூட்டல்களைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவையே உள்ளது. ஒரு பெண் கல்வி பெறுவதன் மூலம் குடும்ப, சமூக, நிறுவன நிர்வாகத்தை ஒழுங்காக மேற்கொண்டு செல்ல முடியும். இதற்கு அப்பெண்ணிடம் கல்வியறிவு அவசியம் தேவைப்படுகின்றது. இந்தவகையில் நோக்கும் போது, பெண்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் இலங்கையில் போதியளவு காணப்படுகின்றன.

### 4.7 பெண்களின் வலுவூட்டலில் உயர்கல்வியிலுள்ள சவால்கள்

மேற்கூறப்பட்டவாறு இலங்கையில் பெண்கள் உயர்கல்வியைப் பெறுவதற்கான வளங்கள் காணப்படினும் பால்நிலை எதிர்பார்ப்புக்களால் பெண்களால் தங்களது வலுவூட்டலை செம்மையாக மேற்கொள்ள முடியாதிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. பெண்கள் உயர்

கல்வி தொடர்வதில் காணப்படும் சவால்கள், பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகள் பல கோணத்தில் நின்று மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளில் அடையாளப்படுத்தப் பட்டிருந்த சவால்கள் பால்நிலை வகிபாக எதிர்பார்ப்புக்களின் பிரதிபலிப்பாக அமைந்திருந்ததை கண்டு கொள்ள முடிந்தது. இந்தவகையில், பெண்களின் வலுவூட்டலில் உயர்கல்வியை தொடர்வதில் அவர்கள் கொண்டுள்ள சவால்களை பின்வருமாறு நோக்கலாம்.

*சமூகச் சூழல்:* இதில் குடும்பம் முதன்மையாக காணப்படுகின்றது. ஏனெனில் சமூகத்தின் பால்நிலை வகிபாக எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டுமென எண்ணுகின்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை மாத்திரம் பெற்றுக் கொள்வது போதுமானது என்ற மனோநிலையை உருவாக்குகின்றது. இதனால் தங்கள் பெண் பிள்ளைகள் உயர்தரப் பரீட்சை எழுதியவுடன் திருமணம் முடித்துக் கொடுக்கும் வழமையை பின்பற்றுகின்றனர். சமய கட்டுப்பாடுகள் காரணமாகவும் உயர்கல்வியை தொடர்வதில் பெண்கள் சவால்களை எதிர்நோக்குகின்றனர். சமய விதிமுறைகள் பெண்களுக்கு காணப்படினும் சமூகத்தில் எதிர்பாக்கப்படுகின்ற பால்நிலை வகிபாகங்களை எதிர்த்து செல்ல முடியாத நிலையை பெண்கள் எதிர்கொள்கின்றனர். குறிப்பாக பட்டப்பின் படிப்புகளை மேற்கொள்ள எத்தணிக்கும் பெண்களுக்கு தங்கள் கணவர்மாரின் ஒத்துழைப்பு கிடைப்பதில்லை, செலவு அதிகரித்தல், கடுமையான வேலைப்பளு ஏற்படுதல், குடும்பத்தை விட்டு பிரிய நேரிடுதல் போன்ற காரணங்களினால் அவர்கள் பட்டப்பின் படிப்பை தொடர்வதில் பின்வாங்குவதாக ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

*விழிப்புணர்வு இன்மை:* கல்வியின் மூலமே தங்களை வலுவூட்டிக் கொள்ள முடியும் என்பதை பெண்கள் புரிந்துகொள்ளாமையின் காரணமாகவும் அவர்கள் பெண்களின் வலுவூட்டல் விடயத்தில் கூடுதல் கரிசனை கொள்வதில் இருந்து விலகிக் கொள்கின்றனர். பாடசாலைக் கல்வியின் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்ற பெண் மாணவிகள் பல்கலைக்கழக கற்கைத் தெரிவில் இலகுவாகப் பட்டம் பெறுவதற்கு, அரச தொழில் ஒன்றை பெறுவதற்கு சார்பான வகையில் தங்களது கற்கைத் தெரிவை மேற்கொள்கின்றனர். இதன்போது, அவர்களது குடும்ப, சமய, கலாசார பால்நிலை வகிபாகங்கள் இத்தெரிவுகளில் தாக்கம் செலுத்துகின்றன. உயர் கல்வியில் பெண்களின் நுழைவு ஆண்களை விட அதிகமான இலங்கையில் காணப்படினும் அக்கல்வியூடாக பெண்களின் வலுவூட்டலை ஒழுங்குபடுத்தக் கூடிய வகையிலான பொறுப்புகளுக்கு பெண்கள் உள்நுழைய வேண்டும். உயர் கல்வியைப் பெற்று அரச தொழில் ஒன்றை பெறுவது மாத்திரம் இலங்கையிலுள்ள பெண்களுக்கு போதுமான விடயமல்ல. மாறாக, அவர்கள் பெண்களின் வலுவூட்டல்களில் அக்கறையுடன் செயற்பட வேண்டிய கடமையும் உள்ளது. ஏனெனில், கல்வி ரீதியாக உயர் பதவிகளைப் பெறுகின்ற போதே, ஒரு நிறுவனத்தில் காணப்படும் வளங்களை பால்நிலை பக்கசார்பின்றி பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும். இலங்கையில் உயர்கல்வி மூலமாக பெண்களின் வலுவூட்டல்கள் மேற்கொள்ளப்படினும், அவை இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதற்கே இங்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. உயர்கல்வி மூலம் பெண்களின் பொருளாதார, நிர்வாக, சமூக வலுவூட்டல்கள் மேலும் சிறப்பாக இடம்பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

*பின்வாங்கல்:* உயர்கல்வியை முடித்து சிறந்த அடைவுகளைப் பெற்ற பெண்கள் தொழில்களுக்கு செல்லாமல் இருப்பதும், தொழிலில் ஈடுபடும் பெண்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் கவனயீனமாக இருப்பதும், கல்வித் தரங்களுக்கு ஏற்ப பதவிகளை ஏற்க மறுப்பதும் பெண்களின் வலுவூட்டலுக்கு பாதிப்பாகவே அமையும். கற்றுக் கொண்ட கல்வியை நடைமுறைப்படுத்துவதில் பெண்கள் பின்நிற்கும் நிலையை அவதானிக்கலாம். இதற்கும் பால்நிலை குறித்த சமூக எதிர்பார்ப்புகளே பிரதான அம்சமாக காணப்படுகின்றன எனலாம். இந்த நிலைமையையும் சீர்செய்ய வேண்டிய பொறுப்பு கல்விகற்ற பெண்களையே சாரும். குறிப்பாக, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், பாலியல் துன்புறுத்தல்கள், கட்டாயத் திருமணம், பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான வன்முறைகளும் நீக்கப்படுவதற்கு பெண்கள் கல்வி ஊடாக பெண்களின் வலுவூட்டல்களை மேற்கொள்ள வேண்டும் (அஸ்லம், 2019).

## 5. முடிவுரை

பெண்கள் உயர்கல்வியில் ஆண்களை விட கூடுதல் ஈடுபாடு காட்டுவதால் பெண்களின் வலுவூட்டல் சமூகத்தில் அதிகரிப்பதை காணலாம். உயர் கல்வியைத் தொடர்கின்ற பெண்கள் சமூகச் சூழல், விழிப்புணர்வின்மை, பின்வாங்கல் போன்ற காரணங்களினாலும் பெண்களின் வலுவூட்டலில் தாக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கற்றுக் கொள்கின்ற கல்வி மூலம் பெண்களின் வலுவூட்டலுக்கு சார்பாக

செயற்பட முடியுமென்பதில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள, தலைமை தாங்க, நிர்வாகம் செய்ய பின்நிற்காமல் செயற்பட வேண்டும் என்பதையும் உயர்கல்வி பெறுகின்ற பெண்களுக்கு எடுத்துரைப்பதன் மூலம் இலங்கையில் பெண்களின் வலுவூட்டலை மேலும் வியாபிக்க முடியும்.

இறுதியாக, பெண்களின் வலுவூட்டலில் இலங்கையில் உயர்கல்வியின் பங்களிப்பு சிறப்பாக காணப்படுவதனால் உயர்கல்வித் துறைகளிலும், தொழிற் துறைகளிலும் பெண்களின் பிரவேசம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதனடியாக, பெண்களின் வலுவூட்டல்கள் மென்மேலும் ஸ்திரமடைந்து கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

**உசாத்துணைகள்**

அய்யூப், எஸ்.எம். (2018). பால்நிலை வகிபாகங்கள் சமூகமயமாக்கப்படல். *Journal of Review, Department of Social Sciences,* 5(1), p.125-131.

அஸ்லம், ஸஜா. (2019). *சமூக முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாதது.* http://aslamsaja.com.

கஜானா, பிறிஸ்கா, கஜவிந்தன், க. (2018). தமிழர் வாழ்வியலும் பால்நிலை மனப்பாங்கும். *Proceedings of 8th International Symposium-2018, South Eastern University of Sri Lanka.*

சந்திரசேகரம், ப. (2011). *கல்வித் தத்துவம்.* கொழும்பு: சேமமடு புத்தகசாலை.

வாத்தியார். (2015). *பெண்களின் கல்வியும் சமுதாய முன்னேற்றமும்.* https://yarl.com/forum3/topic.

விதானகம, ரன்மினி. (2017). *பெண்களின் பொருளாதார வலுவூட்டல்: எழுத்தாக்கங்கள் மீதான மதிப்பீட்டாய்வு.* மொ.பெ. பொ.சிவஞானம். கொழும்பு: இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம்.

ஹஸ்புல்லாஹ் எஸ்.எச், சைபுத்தீன் என்.பி.எம் (2000), *இலங்கையில் முஸ்லிம் கல்வி (பெண் கல்வியும் உயர்கல்வியும்).* கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி, செயல்முன்னணி.

Abdul Jabbar, M.; Rameez, A.; Fathima Sajeetha, T. & Lumna, N. (2015). Gender Equality in Public Administration: The Study Focuses on Public Institutions in Nintavur Divisional Secretariat Area. *South Eastern University Arts Research Session.*

Ahamedlebbe, S.M. (2011). Gender Imbalances in University Admission in Sri Lanka. *Journal of Management,* 7(1), October 2011, p. 24-35.

Gunatilaka, R. (2013). *Women's Participation in Sri Lanka's Labour Force: Trends, Drivers and Constraints.* Colombo, Sri Lanka: International Labour Organization. http://www.ilo.org/colombo/whatwedo/publications/WCMS_215445/lang--en/index.htm

Gunawardena, Nalika. (2015). Women in Sri Lanka: achievements and challenges. *Journal of the College of Community Physicians of Sri Lanka*. 20(4), 10.4038/jccpsl.v20i1.8067.

Jewkes, R. (2002). Intimate partner violence: causes and prevention. *The Lancet,* 359(9315), 1423–1429.

Kabeer, Naila. (2005). Gender equality and women's empowerment: A critical analysis of the third millennium development goal 1. *Gender & Development,* 13(1), 13–24. http://doi.org/10.1080/13552070512331332273.

Kabeer, N. (1999). Resources, Agency, Achievements: Reflections on the Measurement of Women's Empowerment. *Development and Change,* 30(3), 435–464. http://doi.org/10.1111/1467-7660.00125.

Lorber, J. (1997). *The variety of feminisms and their contributions to gender equality.* http://www-a.ibit.unioldenburg.

Malhotra, A., & Schuler, S. R. (2005). *Women's empowerment as a variable in international development.* In D. Narayan-Parker (Ed.), Measuring empowerment: Cross-disciplinary perspectives (pp. 71–88). https://books.google.com/books?hl=en&lr.

Presidential Secretariat. (2020). *President symbolically hands over letters of appointment to newly recruited graduates.* https://www.presidentsoffice.gov.lk/index.php/2020/09/02 /president- symbolically- hands-over-letters-of-appointment-to-newly-recruited-graduates/

Sanjeewani, Kumudu Sumedha. (2015). The Impact of Women Empowerment Programs on Upcountry Tea Estate Women in Sri Lanka. *International Journal of Scientific Research and Innovative Technology*, 2(7), July 2015, p.36-48.

*Sri Lanka University Statistics.* (2019). Sri Lanka: University Grants Commission.